# மான்மின் செய்திகள்

Private Circulation மான்மின் செய்திகள் நெ.42

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St., Villivakkam, Chennai - 49, India. Tel : 044-43554542, Fax : 044-26172471, E-mail : indiajoseph@gmail.com

## 95 தேசங்களிலிருந்து மக்கள் மான்மின் அங்கத்தினர்களாக பதிவு செய்துள்ளனர்

### கொலம்பிய அங்கத்தினர்களை பராமரிக்கும்படியாக மான்மின் மத்திய திருச்சபை கொலம்பியாவில் கிளை சபை ஒன்றை ஆயத்தம் செய்துள்ளது.

திருச்சபை இணையதளமான www.manmin.org வழியாக பதிவு செய்கிற புதிய வரவாளர்களின் எண்ணிக்கை சீராக உயர்ந்துள்ளது.

ஆங்கிலம், எளிமையான சீனம், பாரம்பரிய சீனம், ஜப்பானியம், பிரெஞ்சு, ஸ்பானியம் மற்றும் ரஷ்யம் உட்பட ஏழு மொழிகளில் மான்மின் மத்திய திருச்சபை தனது அலுவலக இணைய தளத்தை வைத்துள்ளது. இணையத்தில் புதிய வரவாளர்கள் மான்மின் அங்கத்தினர்களாக பதிவு செய்ய ஒரு மெனுபார் உள்ளது. பதிவு முறையின் மூலமாக, 2006 ஜனவரி முதல் தற்போது வரை 95 தேசங்களிலிருந்து மக்கள் திருச்சபை அங்கத்தினர்களாக பதிவு செய்துள்ளனர். இவைகளில், USA, கனடா, பிரேசில், பனாமா, மோல்டோவா, ரொமெனியா, டென்மார்க், மியான்மார், சௌதிஅரேபியா, ஓமன், துருக்கி, குவெய்த், போட்ஸ்வானா, துனிசியா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் சிலவாகும்.




கொலம்பியாவில் கிளை சபை இல்லை என்றாலும்கூட நூற்றுக்கணக்கான ஜனங்கள் அங்கிருந்து மான்மின் மத்திய திருச்சபையில் பதிவு செய்துள்ளனர். மேலும் அவர்களுக்கு உதவி அளிக்குமாறு கொலம்பியாவின் தலைநகரான போகோடாவில் கிளைசபை ஒன்று திறந்திட நம்முடைய திருச்சபை ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறது.

திருச்சபையின் இணைய தளம், GCNTV (Global Christian Network, www.gcntv.org). அறிவர்.லீ ஜேராக் அவர்களது புத்தகங்கள், மான்மின் செய்திகள், அறிவர். லீ அவர்களது பிரசங்கங்கள் மற்றும் சாட்சிகள் மூலமாக ஏராளமான ஜனங்கள் அதிக கிருபை பெற்று கொள்வதாலும் அவர்களில் பலர் மான்மின் மத்திய திருச்சபையின் அங்கத்தினர்களாக எவ்வாறு மாறலாம் என்று திருச்சபையை கேட்டதாலும், திருச்சபை இந்த மெனுபாரை உண்டாக்கியது.

வெனின்சுலாவிலிருந்து ஆன்லைனில் பதிவு செய்த போதகர் ஹோரசே லீயோநார்டோ, "தலைமை போதகர் பிரசங்கங்கள் உள்ளடங்கிய DVD மூலமாக நான் ஏராளமான கிருபை பெற்றுக் கொண்டேன், எனது திருச்சபை அங்கத்தினர்களுடன் அதை பகிர்ந்து கொள்வேன்" என்று கூறினார். அதன் பின்னர் தன் இதயங்கனிந்த நன்றியை தெரிவித்தார்.

ரஷ்யாவிலிருந்து அல்குயி இன்பாயேவ், "ஒவ்வொரு வாரமும் அறிவர்.லீ அவர்களது செய்தியை கேட்டு கொண்டிருந்தேன். இறுதியாக நான் இன்னும் என் விசுவாசத்தை அதிகரித்து கொள்ளும் படியாக மான்மின் அங்கத்தினராக பதிவு செய்து கொண்டேன் என்று கூறினார்.

பிரான்சிஸ் என்று அழைக்கப்படும் கென்ய பெண்மணி ஒருவர், ".:.பேமிலி TV மற்றும் இணையதளத்தின் மூலமாகவும் நிகழ்ச்சிகளை பார்த்த பின்னர் அவ்வழியத்தால் தொடப்பட்ட காரணத்தால் நான் மான்மின் அங்கத்தினராக பதிவு செய்து கொண்டேன்". அவர் தற்போது நைரோபி மான்மின் திருச்சபையில் பங்குபெற்று கொண்டு இருக்கிறார். மேலும், ஒவ்வொரு நாளுக்கு நாளும் தலைமை போதகர் அறிவர்.லீ அவர்களிடத்தில் ஜெப வேண்டுகோள் விடுக்கும் கடிதங்களின் எண்ணிக்கை தத்ருபமாக உயர்ந்துள்ளது. இது இந்த உலகத்தில் இத்திருச்சபையின் நிலையை உணர்ந்துகொள்ள செய்கிறது. 2012, பரிசுத்த ஆவியின் பகிரங்கமான கிரியைகளாலும், தேவனுடைய மாபெரும் ஆச்சர்ய வல்லமையாலும், மான்மின் மத்திய சபை பூலோக மாகாணத்தை (Global Parish) அதிவிரைவாக அடைய பெற வளரும்.

மான்மின் மத்திய சபையின் ஆராதனை கூடுகைகள் GCN TV வழியாக ஒளிபரப்பப்பட்டு கொண்டிருக்கின்றன. ஆதலால் அகில உலகத்தில் உள்ள நேயர்கள் ஆராதனைகளில் இணைந்து பங்குபெறுகின்றார்கள். (பார்க்க பக்கம் 3) அறிவர். லீ அவர்களது செய்திகள் ஆங்கிலம், ஜப்பானியம், சீனம், பிரெஞ்சு, ஸ்பானியம், மங்கோலியம் மற்றும் டகோலாகு மொழியில் உடனுக்குடன் மொழிபெயர்க்கப்படுகின்றன.

சுகமாகுதலின் சாட்சிகளுக்கு கூடுதலாக, தேவனுடைய வல்லமையான கிரியைகள் மற்றும் ஆடல் பாடல் கச்சேரியில் காண்பிக்கப்பட்ட உயர்தரமான கிறிஸ்தவ கலாச்சாரமும் ஒளிபரப்பப்படுகின்றன.

## "கோக்மின் வங்கியில் நான் இளம் ஊழியையாக சேர்ந்தேன்"




சகோதரி யே-யுன் கிம்
(1வது வாலிபர் பணித்தளம்)

கொரியாவில், வேலையில்லா திண்டாட்டம் வானுயர உள்ளது, அதிகம் படித்த ஆண்கள்கூட வேலையில் அமர்வது மிக கடினமாக உள்ளது. ஆனால் இங்கே ஒரு சிறு பெண் கோக்மின் வங்கியின் இளம் ஊழியையாக கூலிக்கு அமர்த்தப்பட்டிருக்கிறாள். அவள் க்வாங்'. வாமுன் கிளைக்காக வேலை செய்கிறாள். அக்டோபர் 2011ல் தனது 17வது வயதில் வங்கியின் பணியாளாய் சேர்ந்தாள். அவள் கோக்மின் வங்கிக்காக வேலை செய்த மற்றெல்லாரிலும் மிக இளமையான வயதிலே வேலையை துவங்கினாள்.

"எங்களது கிளையை தான் பணிபுரிவதற்கு சிறப்பான இடம் என பணியாளர்கள் பலர் கருதுவர் என சொல்ல கேட்டேன். எனது சரிதை ஜுங் - ஆங் இல் போ போன்ற செய்தித்தாள்கள் மூலமாக வெளியிடப்பட்டது. நான் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்".

அவள் மேனிலை பள்ளியில் இருக்கும்போது, முதல் வகுப்பு கணினி, எண் கணித சான்றிதழ் உட்பட மொத்தம் 14 உத்தியோக சம்பந்தமான சான்றிதழ்களை சம்பாதித்திருந்தாள். அவள் 80 கிலோ (176பவுண்டு) எடையிலிருந்து 50கிலோ (110பவுண்டு) ஆக 30கிலோ எடையையும்கூட குறைத்தாள்.

அவள் இவையெல்லாவற்றையும் தேவனுடைய அன்பாலும் கிருபையாலும் தான் அடைய முடிந்தது என கூறினார்.

"திருமணமான மூன்று வருடத்தில் தலைமை போதகர் அறிவர்.லீ ஜேராக் அவர்களது ஜெபத்தின் மூலமாக எனது தாயார் என்னை கருவுற்றார்கள். கண்ணீரோடு தலைமை போதகர் உலக போக்கினால் கறைபடக்கூடாது என்றும், மாணவர்கள் தங்களது கடமைகளை மறுக்கக்கூடாது என்றும் மாணவர்களிடம் கேட்டுக்கொண்டார். அவரது அன்பால் நான் அசைக்கப்பட்டேன், அது நான் கடினமாய் படிக்கவும், ஊக்கமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழவும் செய்தது".

அவள் தற்போது மிக இளமையான கிளை நிர்வாகியாக வேண்டுமென விரும்புகிறாள். எப்பொழுதும் ஆண்டவருடைய கிருபை அவளுடன் இருக்குமென நம்புகிறோம்.

## புகைப்பட செய்தி



"வேதாகமம் படிக்கும் நேரத்தை நாங்கள் நேசிக்கிறோம்"

ஜனவரி 8 அன்று, 2012ல் முதல் வேத வகுப்பை மெய்யான ஆசீர்வாதத்தை தேடும் சிறார்கள் பாகம் - 2 என்ற சிறுவர் வேதபாட புத்தகத்துடன், சிறுவர் ஞாயிறு பள்ளியின் ஆசிரியர்கள் திறந்தனர். அப்புத்தகம் அறிவர்.லீ அவர்களது, மெய்யான ஆசீர்வாதத்தை தேடும் மனிதன் என்ற புத்தகத்தின் அடிப்படையில் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.

# உலகம் முழுவதும் முழங்கிடும் திருச்சபை

"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" (அப் 1:8).

1982ல் தேவன் மான்மின் மத்திய திருச்சபையை ஸ்தாபித்து, இத்திருச்சபைக்கு தேசிய சுவிசேஷப் பணியையும் உலக பணித்தளத்தையும் கடமையாக கொடுத்து இத்திருச்சபையை உலகம் முழுவதற்கும், நற்செய்தியை பரப்புவதற்கு செய்தார். அவர் இத்திருச்சபை ஆவிக்குரிய நித்திரையில் இருக்கும் மக்களை எழுப்பும்படி செய்தார். நம்முடைய இருதயங்களில் இக்கடமையோடு கடந்த 30 ஆண்டுகளாக அவற்றை நிறைவேற்றும்படியாக இடைவிடாமல் ஓடியுள்ளோம். இறுதியாக, நாம் 10,000 கிளை மற்றும் ஒருங்கிணைந்த சபைகள் உள்ளவர்களானோம்.

2012, ஆசீர்வாதத்தின் ஆண்டில், ஆதி திருச்சபைகளை போல பரிசுத்த ஆவியின் வெடித்து கிளம்பும் பகிரங்கமான வல்லமையில் நாம் முழு உலகத்திற்கும் முழங்கிடும் திருச்சபையாக நாம் தேவனுடைய ராஜ்ஜியத்தை மாபெரிதாக அடையப்பெறுவோம். அப்படியென்றால், நாம் முழங்க வேண்டியது என்ன?

### 1.நாம், பரிசுத்த சுவிசேஷத்தையும் தேவனுடைய வல்லமையையும் சகல தேசத்திற்கும் அறிவிக்க வேண்டும்.

தேவனுடைய ஊழியனாவதற்கு தேவன் எனக்கு அழைப்பு கொடுத்தபோது, அவர் என்னுடன் பேசி "மூன்று வருடங்களுக்கு வார்த்தையை நீ கற்றுக்கொண்ட பின்னர், மலைகளை தாண்டி, ஆறுகள் சமுத்திரங்களை கடந்து நீ அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்வாய்" என்று கூறினார். மான்மின் திருச்சபை இத்தரிசனத்தின் மேலே ஸ்தாபிக்கப்பட்டது.

இத்திருச்சபையை ஆரம்பிப்பதற்கு முன்பு தானே நான் அவர்தாமே திருச்சபையின் பெயரை எனக்கு தர வேண்டுமென தேவனிடம் கேட்டுக்கொண்டேன். ஆகவே, அவர் பதிலாக அதை "மான்மின்" அதாவது "சகல தேசம்" என்று பொருள்படும்படி அழைக்கக் கொடுத்தார். இப்பெயர், இத்திருச்சபை சகல தேசத்திற்கும், சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் என்ற அர்த்தத்தை கொண்டுள்ளது. அதே வேளையில் தேசிய மற்றும் உலகளாவிய சுவிசேஷ பணியின் அஸ்திபாரங்களும் அமைக்கப்பட்டன.

குறிப்பாக, 2000ஆம் ஆண்டிலிருந்து, உலகளாவிய பணிக்கென தேவன் கதவுகளை விசாலமாக திறந்திருக்கிறார். பூலோகத்தின் முக்கிய பகுதிகளில் பரிசுத்த சுவிசேஷத்தையும், தேவனுடைய வல்லமையையும் பிரசங்கிக்க நம்மை வழி நடத்தியுள்ளார். ஆனாலும் தேசிய மற்றும் உலகளாவிய சுவிசேஷப் பணியின் உண்மையான துவக்க புள்ளி இந்த 2012-ஆம் ஆண்டு ஆகும்.

7பில்லியனுக்கும் அதிகமான ஆத்துமாக்கள் ஆவிக்குரிய ஆழந்த நித்திரையில் உள்ளனர். அவர்கள் இருளினால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்தவம் உலகத்திற்கு வெளிச்சமாகவும், உப்பாகவும் மாற வேண்டியது, ஆனால் அது ஜனங்களால் புறக்கணிக்கப்பட்டு கொண்டிருக்கிறது. ஐரோப்பா சுவிசேஷத்தின் பிறப்பிடமானது, ஆயினும் அங்கே அதிர்ச்சியூட்டக்கூடிய குறிக்கோள் சொற்றொடர் "அநேகமாக தேவன் இல்லை" என்று காணப்படுகிறது. அங்கே அந்தி கிறிஸ்துவின் வல்லமையால் விசுவாசத்தின் ஜுவாலை தணிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அந்தி கிறிஸ்து தன்னுடைய வல்லமையின் ஆதிக்கத்தை உலகம் முழுவதிலும் விஸ்தரித்துக்கொண்டு இருக்கின்றான்.

இதன் காரணமாகவே, சராசரியான வல்லமையுடைய கையளவான ஊழியர்களை வைத்து கொண்டு இத்தலைமுறையினரை எழுப்புவது என்பது கூடாத காரியமாய் இருக்கிறது. இயேசுவின் வல்லமையை போல வல்லமையான கிரியைகளும் அப்போஸ்தலர்களைப் போல வல்லமையான ஊழியர்களும் நமக்கு அத்தியாவசிய தேவையாய் உள்ளனர். ஆகவே தான் தேவன் மான்மினில் உள்ள விசுவாசிகளுடைய விசுவாசத்தையும் வல்லமையும் அதிகரித்து கொண்டு இருக்கிறார். அத்தோடுகூட என்மேல் ஊற்றப்பட்டுள்ள தம்முடைய வல்லமையின் எவ்வித வரையறையையும் நீக்கி அவ்வல்லமையை இன்னும்கூட அதிகமாக மாபெரிதாக கூட்டியுள்ளார்.

### 2."மூன்றாம் கட்ட பறக்க துவங்குதலில்" தேவன் அதிவேக ஆவிக்குரிய ஓட்டத்தை மான்மினிற்கு தந்துள்ளார்.

தேவன் திருச்சபை திறந்த 1982 மற்றும் திருச்சபை அடிப்படையான அஸ்திபாரத்தை ஸ்தாபித்த 1999 ஆண்டுகளுக்கு இடையிலான காலகட்டத்தை முதல் கட்ட பறக்க துவங்குதல்" என்று அழைத்தார். "இரண்டாம் கட்ட பறக்க துவங்குதல்" என்பது உலகளாவிய சுவிசேஷப்பணி முழு வீச்சில் சிருஷ்டிப்பின் வல்லமையோடு துவங்கிய 2000ம் ஆண்டு முதல் இஸ்ரேல் ஊழியம் நிறைவடைந்த 2009வரை ஆகும். "மூன்றாம் கட்ட பறக்க துவங்குதலில்" தேவனுடைய அநாதி தீர்மானத்தை நிறைவேற்றுகிறதில் உள்ளோம்.



தலைமை போதகர் டாக்டர். லீ ஜேராக்

தேவன் 2010த்தை "மூன்றாம் கட்ட பறக்க துவங்குதலும்", "அறுவடையின் ஆண்டின்" துவக்க ஆண்டு என்றும் அழைத்தார். தேவன் "விசுவாசத்தின் அளவு" என்ற ஜெப தலைப்பை நமக்கு கொடுத்து நம்முடையவர்கள் ஒவ்வொருவரது விசுவாசத்தை நன்றாக பரிசோதிக்க செய்தார். ஒவ்வொரு நபருக்கும் பாவங்களையும், ஒவ்வொரு நபருக்குள்ளும் மறைந்துள்ள பாவ இயல்புகளையும் அவர் வெளிப்படுத்தினார். தயவாக, அவர் நம்முடைய கடந்த கால பாவங்களையும், அக்கிரமங்களையும் மன்னிப்பதற்கு விசேஷித்த கிருபை நல்கினார்.

இந்த செயலினால், தேவன் முதலாவது, இரட்சிப்பின் எல்லை கோட்டிற்கு அப்பால் அலைந்து திரிந்த வர்களை முதல் நிலை விசுவாச அளவிற்கு உயர்த்தினார். 1 மற்றும் 2ம் விசுவாச நிலையில் உள்ளவர்களை 3ம் விசுவாச நிலை அளவிற்கு உயர்த்தினார்.

2011ல், மான்மின் அங்கத்தினர்களும் வாலிப அங்கத்தினர்களும்கூட, தேவனுடைய அன்பாலும், ஆண்டவருடைய கிருபையாலும், மேய்ப்பருடைய ஜெபத்தாலும், அசைக்கப்பட்டு, புதிய எருசலேம் நகரத்திற்குள் நுழைய, பரிசுத்தமாகுதலையும் தகுதியையும் பெற்றுக்கொள்ள புதிய எருசலேம் பாசறையை துவங்கினர். இந்த லட்சியத்தை அடைய அவர்கள் தங்களை தேவனுடைய வார்த்தையால் தரித்துக் கொண்டு ஊக்கமாக ஜெபித்தனர்.

நாம் நம்மை பரிசுத்தமாக்கிகொள்ளவும், விசுவாசத்தை காத்து, ஆண்டவருடைய சாயலை பெறவும், தேவன் நம்மை வழிநடத்தினார். அவர் நம்மை 3ம் நிலை விசுவாசத்திலிருந்து, விசுவாசத்தின் கன்மலைமேல் நிற்கவும், ஆவிக்குரிய நிலையை அடைய முன்னேறும்படியும் நம்மை வழிநடத்தினார். மே மாதத்தில், தேவன் தம்முடைய மெய்யான வெளிச்சமாகிய அரோரா-போன்ற வெளிச்சம் இத்திருச்சபையை சூழ காண்பித்தார்.

ஜூன் மாதத்தில், மூன்று தெய்வீக சுகமளிக்கும் கூட்டங்களையும், ஜூலை மாதத்தில் தலைமைத்துவ கருத்தரங்கையும் நடத்த உதவி செய்தார். இந்த நிகழ்வுகளால், மிக குறுகிய கால கட்டத்திற்குள் விசுவாசிகளில் பலர் விசுவாசத்தின் கன்மலையின்மேல் நிற்கலானார்கள். நீண்ட காலமாக ஆவிக்குள் செல்தலின் விளிம்பில் இருந்தவர்கள், ஆவிக்குள்ளாகவும், பூரண ஆவிக்குள்ளாகவும் சென்றார்கள்.

மேலும், இன்றைக்கு உங்களுக்காக தேவன் நீதியின் பிரமாணத்தை உங்களுக்கு பதிலாக நிறுத்தப்பட்ட உங்கள் மேய்ப்பர் மூலமாக, நிறைவேற்றியுள்ளார். தேவன் உங்களுக்கு, விரல் எலும்பு முறிதல், குரல் வலை சிதைதல், பெலன் இழந்து போதல், வயிறு செயல் இழந்து போதலை காட்டி, நான் உங்களுக்கு பரிபூரண விசுவாசத்தின் மாதிரியை காட்ட செய்து நீங்கள் உங்கள் இருதயத்திலும்கூட பரிபூரண விசுவாசமுடையவர்களாகும்படியாக, செய்தார். உங்களில் பலர் இந்நிகழ்வினால் மெய்யான அன்பும் மெய்யான விசுவாசமும் உடையவர்களானீர்கள் என்று சொன்னீர்கள். இப்போது, இவையெல்லாம் ஒன்றாக செயல்பட்டு, நீங்கள் ஆண்டவருடைய யுத்த வீரர்களாக பிறக்கும்படி செய்தது.

### 3.ஆண்டவருடைய யுத்த வீரர்களாக மாற நீங்கள் என்ன செய்யவேண்டும்?

#### முதலாவது, பரிசுத்த வஸ்திரங்களை நீங்கள் தரித்து கொள்ளவேண்டும்.

ரோமர் 13:14, "துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்" என்று கூறுகிறது. இங்கே வஸ்திரம் என்பது இருதயத்தை குறிக்கிறது. இன்னும் தங்களுக்குள் பாவ இயல்பு உள்ளவர்களுக்கு, நீங்கள் இவ்வருடத்திற்குள் அவைகளை உங்களைவிட்டு அகற்ற உங்களை ஊக்கப்படுத்துகிறேன். பிற்பாடு, அஞ்ஞானிகள்கூட உங்களை மெய் கிறிஸ்தவர்கள் என்று அறிந்துகொண்டு நீங்கள் முழங்குவதற்கு செவி கொடுப்பார்கள்.

பரிசுத்த வஸ்திரம் என்பது உங்கள் பரிசுத்த இருதயத்தைக் குறிக்கிறது. உங்களை ஆண்டவருடைய ஊழியர்களாகவும், பரிசுத்த ஆவியின் கருவிகளாகவும் வர்ணிக்கிறது. பரிசுத்த வஸ்திரங்கள் உங்களை பாதுகாக்கவும் செய்யும். நீங்கள் எங்கே போனாலும், வனாந்திரத்திற்கானாலும், உயர் பர்வதத்திற்கானாலும் நீங்கள் பரிசுத்த வஸ்திரத்தை தரித்திருக்கும் வரையில் நீங்கள் தேவனால் பாதுகாக்கப்படுவீர்கள். இன்றைக்கு, அநேகர் "கர்த்தாவே, கர்த்தாவே" என்று கூப்பிடுகிறார்கள், ஆயினும், மெய் கிறிஸ்தவர்கள் தங்கள் இருதயமான வஸ்திரத்தின் மூலமாக அடையாளம் காணப்படுகிறார்கள் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

#### இரண்டாவதாக, நீங்கள் பலமான ஆயுதங்கள் உடையவர்களாய் இருக்க வேண்டும்.

ஆவிக்குரிய போர்க்களத்தில் பரிசுத்த சுவிசேஷத்தையும், தேவனுடைய வல்லமையையும் பரப்ப, பிசாசினுடைய பாசறையை அழிக்கக்கூடிய அளவில் பலமான வார்த்தையாகிய பட்டயம் நமக்கு வேண்டும். அதாவது, நீங்கள் உங்களை பரிசுத்த சுவிசேஷத்தின் மூலமாக தயார் படுத்திக்கொள்ள வேண்டும். கூடவே, உங்களுக்கு தேவைப்படும்போது தேவனுடைய வல்லமையை நீங்கள் கீழே கொண்டுவருவதற்கேதுவாக அதிகமான ஜெபத்தை சேகரிக்க வேண்டும். கொடுக்கப்பட்ட அதே பரிசுத்த வஸ்திரத்தை தரித்திருந்தாலும்கூட, நீங்கள் எவ்வளவாய் வார்த்தையை கற்று ஜெபத்தை சேகரித்து வைத்திருக்கிறீர்களோ அவ்வளவாய் வார்த்தையில் அதிகாரமும், தேவனுடைய வல்லமையும் வித்தியாசமாக வெளிப்படும்.

விரைவில், தாகமுள்ள ஆத்துமாக்கள் பலர் திருச்சபையிலிருந்து வேலையாட்களை கேட்பார்கள். கூடவே, தேவனுடைய ராஜ்ஜியமும் விரிவடைய, அதிகமதிகமான காரியங்களையும் செய்யவேண்டியிருக்கும். ஆகவே, இன்றிலிருந்தாவது நீங்கள் முறையாக வார்த்தைகளை கற்று உங்களுக்கு கொடுக்கப்பட்ட கடமைகளை வல்லமையாய் நிறைவேற்றுவதற்காகவும் அதற்காக ஜெபிக்கவும் மாபெரும் வல்லமையுடைய ஆண்டவருடைய நாமத்தினாலே நீங்கள் உற்சாகப்படுத்தப்படுகிறீர்கள்.

#### மூன்றாவதாக, உங்களில் பற்றியெரிகிற அன்புடையவர்களாய் நீங்கள் இருக்க வேண்டும்.

இன்றைக்கு, ஜனங்கள் தங்களை, பணத்தை, சிற்றின்பத்தை மற்ற எல்லாவற்றைக்காட்டிலும் நேசிக்கிறார்கள். அவர்கள் அன்பற்றவர்களாகவும், குரூரமாகவும் உள்ளனர் (2தீமோத்தேயு 3:1-5). அவர்கள் தங்கள் இருதயத்தை இறுக்கி அடைத்து, அதை மற்ற மக்களுக்கோ அல்லது தேவனுக்கோகூட திறப்பதில்லை. அப்படிப்பட்ட இருதயத்தை உருக்கி அதை திறக்கும் திறவுகோல் "அன்பு" ஆகும்.

இரட்சகராவதற்கு அநேகமான மிக முக்கியமான தகுதி "அன்பு" ஆகும். அப்போஸ்தலர்கள் மற்றும் ஆதி திருச்சபையில் இருந்த அங்கத்தினர்களுடைய இருதயத்தில் தங்களை துன்பப்படுத்தினவர்களுக்கான மனதுருக்கமும், மன்னிப்பும் இருந்தது.

மான்மின் மத்திய திருச்சபையின் தலைமை போதகராக, நீங்கள் உங்களில் ஆண்டவருடைய அன்பு அதாவது, மன்னிக்கும் அன்பு, சுயதியாகம் உள்ளவர்களாகவும், புதிய எருசலேமையும், இரட்சிப்பையும் அடையும்வரை எந்த ஆத்துமாவையும் விட்டுவிடாதபடிக்கு, பரிசுத்த ஆவியின் அன்பை உடையவர்களாய் இருப்பீர்கள் என்றும் உண்மையாய் நம்புகிறேன். எண்ணற்ற ஆத்துமாக்களை பாவக் கட்டுகளி லிருந்து விடுதலையாக்க நமக்கு மெய் சமாதானத்தை தந்த ஆண்டவருடைய நாமத்தினால் நம்மை அவர் ஊக்குவிக்கிறார்.

## விசுவாச அறிக்கை

1. மான்மின் மத்திய சபை, வேதாகமம் பரிபூரணமும், பிழையற்றதும், தேவனால் உச்சரிக்கப்பட்ட வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய சபை திருத்துவ தேவனின் ஒருங்கிணைந்த கிரியைகளை நம்புகிறது : பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்.
3. மான்மின் மத்திய சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என்று நம்புகிறது.
4. மான்மின் மத்திய சபை, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய சபையின் உறுப்பினர்கள் கூடி வரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை, "அப்போஸ்தருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலம் அறிக்கை செய்து அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புகிறது.

"எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)." அப்போஸ்தலர் (17:25)

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" அப்போஸ்தலர் (4:12)

மான்மின் சர்வதேச பாடசாலை
இந்திய வளாகம்
Manmin International Seminary - India campus belongs to the United Holiness Church of Korea of which the chairman of the board of directors is Rev.Dr. Jaerock Lee. It is based on the fivefold Holiness gospel: Regeneration, Sanctification, Divine Healing, Resurrection, and Return of Christ.
DIPLOMA IN CHRISTIAN MINISTRY
(One year correspondence programme)
15D/41, Ponnankinaru Street, Villivakkam, Chennai - 600 049.
Tel:044-43554542, Email : indiamis@gmail.com




# GCN ஒளிபரப்பு,
# உலகளாவிய அளவில் தேவனுடைய அன்பை கற்பிக்கிறது.

GCN ஒளிபரப்பு தனது கிறிஸ்தவ ஒளிபரப்பு ஊழியத்தில் தேவனுடைய சித்தத்தைப் பின்பற்றி திரித்துவ தேவனுடைய மகிமையையும் சுவிசேஷத்தையும் எல்லா தேசங்களுக்கும் பரப்புவதற்காகவே நிறுவப்பட்டது. இப்போது உலகம் சமூக இணையதள சேவை மற்றும் வேக பயண முறைகளான புதிய ஊடகங்கள் மூலமாக பூலோகமயமாகி கொண்டிருக்கிறது. அது ஒளிபரப்பு சேவையை மிகவும் ஆதிக்கம்செலுத்த கூடிய வையாக்குகிறது.

இப்போது, சோதோம் கொமோராவின் காலத்தைவிட பாவமும் இருளும் அதிபயங்கரமாக உள்ள இறுதி கால கட்டமாய் இது இருக்கிறது. கிறிஸ்தவர்கள் உலகிற்கு வெளிச்சமாகவும், உப்பாகவும் மிக மையமான வேலையை செய்ய வேண்டும். பூமியின் மூலைமுடுக்குகளில் சுவிசேஷம் சொல்ல வேண்டும். ஆண்டவருடைய இரண்டாம் வருகைக்கு ஆயத்தம் செய்யவேண்டும்.

இப்படிப்பட்ட ஊழியத்தை செய்ய ஒளிபரப்பு ஊழியம் மிகவும் அவசியமானதாகும். இப்பேர்பட்ட காலக்கட்டத்தில், GCN TV, முழு உலகத்திற்கும், தேவனுடைய சுவிசேஷத் தையும், இயேசு கிறிஸ்துவின் அன்பையும், பரிசுத்த ஆவியின் அக்கினியான கிரியைகளையும் பரப்பிக்கொண்டு இருக்கிறது.



## ஒளிபரப்பின் தற்போதைய நிலை.


ஜனவரி 2000த்தில், GCN TVயை விசுவாசத்துடன் மட்டும் நாங்கள் துவக்கினோம். இன்றைக்கு பூலோகம் முழுவதிற்கும் சுவிசேஷம் சொல்லும் அளவிற்கு வளர்ந்து, ஒளிபரப்பு உலகத்தில் கொரியாவில் உள்ளும் புறமும் விசேஷித்த ஒளி பரப்பாளர்கள் மற்றும் செய்தி ஊடகங்களுடன் இணை சேவையை ஸ்தாபித்ததால் தீர்மானமான பகுதியாய் மாறியுள்ளது. GCN TVயினை பிரகடனப்படுத்த ஜீவன் நிரம்பிய வார்த்தையும், வல்லமையான கிரியைகளும் மிகவும் வல்லமையாக மாறியுள்ளது. ஏனென்றால், அதன் நிகழ்ச்சிகள் மூலமாக தேவனுடைய வல்லமையையும் அன்பையும் அனுபவித்த எண்ணற்ற நேயர்கள் தங்கள் வாழ்வில் உள்ள பிரச்சனைகளை தீர்த்து கொண்டனர். வாழ்வின் மெய்யான மதிப்பை கண்டுபிடித்தனர். HD தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட உயர்தர பிரதி பிம்பம், அதன் பலவகையான உள்ளடக்கங்கள் அதன் உயர்தரமான நிகழ்ச்சிகள், உலகிலுள்ள மற்ற ஒளிபரப்பாளர்களுடன் கூட்டுத்தொழில் மூலமாக 170க்கும் அதிகமான தேசங்களில் ஒளிபரப்பப்பட்டு கொண்டு இருக்கிறது. அதன் நிலையத்திற்குள், நன்றி கடிதங்கள், தேசிய எல்லைகளையும், காலத்தையும் கடந்து செல்லக்கூடிய ஜெபத்திற்காகவும், விண்ணப்ப கடிதங்கள் வெள்ளமென வந்து குவிகின்றன.

## தரிசனம்

GCN TVயின் இலக்கு, தேசங்கள் அனைத்தையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திற்கு வழிநடத்தும் உலகின் மிகமுக்கியமான கிறிஸ்தவ TV நிலையமாக குறிக்கோள் கொண்டிருக்கிறது. அது தன் ஒளிபரப்பு ஆளுகையையும், ஊடக மேடையையும், சகல தேசத்தின் நேயர்கள் அனைவரும் GCN TVயை எங்கேயும் எப்போதும் பார்க்கக்கூடிய அளவில் விரிவுப்படுத்தும். ஒவ்வொரு பிரதேசத்தினுடைய குணாதிசயங்களை கருதிய பிற்பாடு, GCN TV, பூலோகம் முழுவதையும் இணைத்து கட்டி, அலைபேசி, இணையதளம், கேபிள் TV, செயற்கைக்கோள், தொலைக்காட்சி உட்பட பலவகை ஊடகங்களுடன் நேயர்கள் அருகில் கடந்துவரும். குறிப்பாக, இப்போது காட்டிலும் நிகழ்ச்சிகள் பல மொழியில் தயாரிக்கப்படும். அதனால் உள்நாட்டுவாசி மக்கள் ஜீவ வார்த்தைகளை இன்னும் தெளிவாக புரிந்து கொண்டு வல்லமையான கிரியைகளை விரிவாக காண்பர்.

கூடுதலாக, GCN ஒளிபரப்பு கிறிஸ்தவ TV நிலையங்களையும், கிளை மற்றும் ஒருங்கிணைந்த திருச்சபைகளையும் இணைத்து கொள்ளும். இது உலக மாகாணத்தை செயல்படுத்தும் முறையை துரிதப்படுத்தும்.

### நேர்காணலிலிருந்து மேற்கோள் சொற்றொடர்.



GCN TV, சுவிசேஷத்தின் தாகத் தோடு இயேசு கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தி சொல்ல மாபெரும் தரிசனத்தை கொண்டிருக்கிறது. அது தன் கடமையை பெரிதாய் செய்யுமென நம்புகிறேன். GCN TV மூலமாக அநேக மக்கள் இயேசு கிறிஸ்து யார் என்று அறிந்து அவரு டைய நாமத்தை விசுவாசிப்பதால் நித்திய ஜீவனை பெறுவார்கள்".

**அறிவர் ஃப்ராங் ரைய்ட், NRB தலைவர் (National Religious Broadcasters).**




"GCN TV நிகழ்ச்சிகள் மற்றும் அறிவர். லீ ஜேராக் பிரசங்கித்த செய்திகள் நேயர்களுடைய இருத யத்தை அசைத்துள்ளது. ஆண்டவ ருக்காக எப்படி நீதியுள்ள வாழ் க்கை வாழ வேண்டுமென தெளி-வான எளிய முறைகளை போதித் துள்ளது. அறிவர்.லீ மூலமாக, பூமியின் மூலை முடுக்குகளுக்கு இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் பரவுகிறது.

**இகோர் நிகிடின், தலைவர் ரஷ்யா RBN ரோட் நாய் மற்றும் TBN ரஷ்யா.**



அதன் அற்புதமான ஒளிபரப்பு முறையாலும் நன்கு வளர்ந்த தொழில்நுட்பத்தின் அடிப்படையினா லும் ஆண்டவருடைய ராஜ்ஜியத்தை விரிவுப்படுத்திய GCN TVயால் நான் தொடப்பட்டு சவாலாய் அறைகூவல் விடுக்கப்பட்டேன். GCN TVயில் வேலைசெய்வதற்கு மிகவும் சந்தோ ஷப்படுகிறேன். இது எங்களுக்கு மிக பெரிதான ஆசீர்வாதம்.

**ரோசல்பா ரோடிரிக்குயுஸ் டே ரின்கோன். தலைவர், என்லேஸ் TBN கொலம்பியா.**




"அறிவர். லீ அவர்களது பிரசங்க ங்கள் மூலமாக, புதுச்சேரி இந்தியா விலுள்ள எண்ணற்ற நேயர்கள் ஆசீர்வாதங்களை பெற்றுள்ளனர். விசுவாசிகளுடைய வாழ்வில் GCN TVயில், உள்ள அனைதது நிகழ்ச்சி களும் மிக பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா முழு வதிலும் GCN TV ஒளிபரப்பப்பட தேவனிடம் நான் பிரார்த்திக்கிறேன்.

**ஆபிரகாம் வின்சென்ட், அருள்வாக்கு GCN TVயின் தலைவர், இந்தியா.**

# ஸ்பானிய மொழி பேசும் ஆத்துமாக்களை அசைத்த மாபெரும் செய்திகள் என் வாழ்வை மாற்றியது.

மூப்பர் அல்டோ என்ரிக்கே குய்டோ-ஸ்பானோ அமொரெட்டி (பெரு மான்மின் திருச்சபை).



டிசம்பர் 2004ல், அறிவர்.லீ ஜேராக் அவர்களது பெரு சுகமாகுதலின் படை முயற்சி கூட்டம், பெருவின் தலைநகரமான லிம்மாவில் நடைபெற்றது. அப்படைமுயற்சி கூட்டம் பெருவில் பரிசுத்த சுவிசேஷத்தின் விதைகளை விதைத்தது. தற்போது அதன் அபரிதமான கனிகள், மையத்திலுள்ள பெரு மான்மின் திருச்சபையாகவும், என்லேஸ் TV நிகழ்ச்சிகள் மூலமாகவும் விளைந்து கொண்டு வருகிறது.

நான் அரசியல் நிபுணனாக வேலை செய்தபோது மிருகத்தனமான வாழ்க்கையில் பணத்தை விரயம் செய்து, குடி போதையையும் அனுபவித்து வந்தேன். பிறகு, 1992ல் ராஜினாமா செய்தேன். அதன்பின்னர், மூன்று வருடங்களுக்கு பிற்பாடு நான் ஆண்டவரை ஏற்றுக்கொண்டேன். ஆனால் காணக்கூடிய அளவில் மாற்றம் ஏதும் என் வாழ்வில் இல்லாதிருந்தது.

**அவ்வேளையில், அறிவர். லீ ஜேராக் அவர்களால் நடத்தப்பட்ட பெரு சுகமளிக்கும் படைமுயற்சி கூட்டத்தில் பங்கு பெற்றேன்.**

ஒரு நாள் ஆச்சர்யமான மாற்றங்கள் என் வாழ்வில் வந்தது. நான் கீழ் தேசத்தில் உள்ள மக்களுக்காக மொழியாக்கம் வேலையை செய்ய நேர்ந்து, மான்மின் மத்திய சபையின் தலைமை போதகர் அறிவர். லீ ஜேராக் அவர்களது ஊழியங்களை குறித்து அவர்களிடமிருந்து, கேள்விப்பட்டேன். அவர்கள் பெருவிற்கு வந்த பணித்தள பயண குழுவினரான திருச்சபை ஊழியர்களாயிருந்தார்கள். இது இப்படியாக மாறியது.

2004 டிசம்பரில், அறிவர். லீ ஜேராக் அவர்களது பெரு சுகமாகுதலின் படைமுயற்சி கூட்டம் பெருவின் தலைநகரான லீம்மாவில் நடத்தப்பட்டது. நான் கண்-திறக்க கூடிய காரியங்களை அனுபவித்துணர்ந்தேன். நான் எண்ணற்ற ஜனங்கள் AIDS மற்றும் புற்றுநோய் போன்ற வியாதிகள் பலவற்றிலிருந்து சுகத்தைப்பெற்று, கொண்டதை கண்ணார கண்டேன். முடவர்கள், சக்கர நாற்காலிகளையும், ஊன்றுகோல்களையும் தூக்கி எறிந்து நடந்து குதித்ததையும் கண்டேன்.

**பரிசுத்த சுவிசேஷத்தின் மூலமான மெய்யான விசுவாசமுடையவனானேன்.**

அது முதல் நான் மான்மின் மத்திய திருச்சபையின் பணித்தள ஊழியனானேன். பெரு மான்மின் திருச்சபைக்கு ஊழியம் செய்த போதகர். லாசரஸ் லீ அவர்களது செய்திகளை மொழிபெயர்க்க துவங்கினேன். அவருடைய செய்திகள் ஆவிக்குரிய ஆழமான அர்த்தங்களை சுமந்து வந்தன. அவர்தாம் பிரசங்கிக்கிற அனைத்து செய்திகளையும் மான்மின் மத்திய சபையின் தலைமை போதகரான அறிவர்.லீ ஜேராக் அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டார் என கூறினார்.

நானும் எனது குடும்பத்தினரும், ஒவ்வொரு வாரமும் செய்திகளை கேட்டு முற்றிலும் மாறுப்பட்ட ஒரு வாழ்க்கையை நடத்த துவங்கினோம்.

எங்களது ஆவிக்குரிய விசுவாசம், மானுட வேளாண்மை, விசுவாசத்தின் அளவு, பரிசுத்தமாகுதல், "இயேசு" மற்றும் "இயேசு கிறிஸ்து"விற்கு இடையில் உள்ள வித்தியாசமான அர்த்தங்கள், காலம் துவங்குவதற்கு முன்னமே மறைக்கப்பட்ட இரகசியம் போன்ற செய்திகள் மூலமாக விரைவில் உயர்ந்தது.

இறுதியாக, கிரியைகளோடு இணைந்த மெய்யான விசுவாசமுடையர்வகளானோம். நான் அறிவாக மட்டும் தேவனுடைய வார்த்தையை சேர்த்து வைத்ததை உணர்ந்தேன்.

**ஒளிபரப்பு மற்றும் பதிப்பு வெளியீட்டு ஊழியங்களில் பங்கு பெறக்கூடிய ஆசீர்வாதத்தை நான் பெற்றுக்கொண்டேன்.**

குறித்த அதே வேளையில், நான் அறிவர்.லீ அவர்களது, புத்தகமான, சிலுவையின் செய்தி மற்றும் விசுவாசத்தின் அளவு என்ற புத்தகங்களை ஸ்பானியத்தில் மொழிபெயர்க்க துவங்கினேன். இன்னும் அதிகமாக ஆச்சர்யப்படகூடியது என்னவென்றால், லத்தீன் அமெரிக்காவில் முன்னனி கிறிஸ்தவ TVயான என்லேஸ் TVயில் ஒளிபரப்பப்படும் அறிவர்.லீ அவர்களது செய்திகளுக்கு குரல்ஒலி கொடுப்பதில் நான் பங்குபெற்றதே. அவரது செய்திகளின் கிட்டத்தட்ட 500 பாகங்களை தற்போது நான் மொழிபெயர்த்துள்ளேன்.

பூமியின் எல்லா மூலைமுடுக்குகளிலும் பரிசுத்த சுவிசேஷத்தை பரப்புவதற்கு நான் செய்து கொண்டிருப்பது மிகவும் முக்கியம் என விசுவாசிக்கிறேன்.

இப்பொழுது அறிவர்.லீ அவர்களது செய்திகள் லத்தீன் மொழிபேசும் தேசங்கள் மற்றும் உலகம் முழுவதும் ஸ்பானியம் பேசும் மக்களிடமும் பரவியுள்ளது. U.S.சிலும் USஸின் பெரும்பான்மையினர் மத்தியிலுள்ள சிறுபான்மை ஜனத்தொகையினரான ஸ்பானியம் பேசும் மக்களிடையேயும் பிரசங்கங்கள் பரவியுள்ளது.

அறிவர்.லீ அவர்களது செய்திகளை மொழிபெயர்க்க துவங்கியதிலிருந்து நானும் ஆச்சர்யமான அபரிதமான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டேன். எனது வாழ்க்கை செழித்தோங்க ஆரம்பித்தது எனது இலக்குகளும் மாறியுள்ளது.


செய்தியில் உள்ளடங்கியுள்ள தேவனுடைய சரியான சித்தத்தையும் ஆத்துமாக்களுக்கான அறிவர்.லீ அவர்களது அன்பையும் சிறப்பாய் வெளிப்படுத்த ஆவலாய் இருந்தேன். அப்படி செய்ய மிகவும் பிரயாசப்பட்டேன். அதனால் எனது குரல் ஒலி மென்மையான குரல் ஒலியாய் மாறியது. எனக்கு கொரியமொழி புரியாவிட்டாலும்கூட, தேவன் அறிவர்.லீ அவர்களது உள்ளத்தை நான் உணர்ந்துகொள்ள எனக்கு உதவி செய்தார். அப்படி செய்வதால், தேவனுடைய வார்த்தையை இன்னும் ஆழமாய் உள்வாங்கிகொள்ளவும், அவருடைய இருதயத்தையும் சித்தத்தையும் உணர்ந்துகொள்ள முடிந்தது.

**புதிய எருசலேமுக்கான நம்பிக்கையுடன் தேவனுடைய இராஜ்ஜியத்திற்காக உண்மையுள்ளவர்களாய் வேலை செய்வதற்கு எனது குடும்பம் பாக்கியமடைந்தது.**

சமீபமாக, ஈகோடரின் தலைநகரமான குயிட்டேவில் வசிக்கும் அங்கத்தினர் ஒருவர் பெரு மான்மின் திருச்சபைக்கு விஜயம் செய்தார். அவர் அதிகமான கிருபை பெற்றபடியால், அவர் தனது சொந்த செலவில்தானே பெருவிற்கு வந்தார். அவர், இப்படிப்பட்ட ஒரு சுத்தமான சுவிசேஷத்தை நான் கேட்டதேயில்லை என்று கூறி செய்திகளின் மூலமாக மெய்யான விசுவாசத்தை அவருக்குள் அனுப்பியதற்காக தனது நன்றியினை வெளிப்படுத்தினார். நாம் தேவனுடைய வார்த்தையை சரியாய் கற்றுக்கொண்டு சந்தோஷமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதும் மெய்யாகவே ஒரு ஆசீர்வாதம் தான்.

நான் இப்போது பரம வெகுமதிகளை பார்க்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, நான் பரிசுத்தமாகி, எல்லா இடங்களையும்விட சிறப்பான வசிப்பிடமான புதிய எருசலேமை அடைவதற்காக ஊக்கமான கிறிஸ்தவ வாழ்க்கை நடத்த விரும்புகிறேன். நான் ஒரு மூப்பராக மாறி, சபையின் பொருளாதார மற்றும் திட்டமிடும் துறையின் தலைவராகவும், அறிவர்.லீ அவர்களது செய்திகளை மொழிபெயர்ப்பவராகவும் வேலைசெய்கிறேன். எனது மனைவியும்கூட மாவட்ட தலைவராகவும், கண்காணியையாகவும் கடமைகளை உண்மையாக பணியாற்றி நிறைவேற்றியுள்ளார்.

நான் ஆண்டவர் மற்றும் பிதாவின் அன்பை அறிந்து கொள்ளசெய்து, புதிய எருசலேமின் பாதையில் வழிநடத்தி செல்லும் வழிகாட்டியாகிய அறிவர்.லீ ஜேராக் அவர்களை என்னை சந்திக்க செய்த பிதாவாகிய தேவனுக்கு எல்லா நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.



2004, Dr. Jaerock Lee's Peru Healing Crusade

Now You can Watch
Rev. Dr. Jaerock Lee's
Program On
Arulvaakku GCN TV
@ all over Puducherry.
www.gcntv.org

MANMIN BIBLE COLLEGE
(Manmin International Seminary - India Campus)
15D/41, Ponnankinaru Street,
Villivakkam, Chennai - 600049
Tel: 044-43554542
E-mail: indiamis@gmail.com

Landmark for
Chennai Manmin
Holiness Church
15D/41, Ponnankinaru Street,
Villivakkam, Chennai - 600049
Tel: 044-43554542

